## வரையறுக்கப்பட்ட தனியார் லங்கா சீனிக் கம்பனி - 2015

வரையறுக்கப்பட்ட தனியார் லங்கா சீனிக் கம்பனியின் (கம்பனி) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 கம்பனியின் ஸ்தாபிப்பு மற்றும் உரிமைத்துவம்

இலங்கை சீனிக் கம்பனி பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் கீழ் மீளப் பதிவுசெய்யப்பட்டது. இது முழுமையாக அரசாங்கத்திற்குச் சொந்தமான கம்பனியொன்றானதுடன் திறைசேரிச் செயலாளர் கம்பனியின் தனியான பங்குதாரராகவுள்ளார்.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட தனியார் லங்கா சீனிக் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான (எல்கேஏஎஸ்/ எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணக்கம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 10 – அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னரான நிகழ்வுகள்**

நிதிக்கூற்றுக்கள் வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட திகதியில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனி இதனுடன் இணங்கியிருக்கவில்லை.

**(ஆ) எல்கேஏஎஸ் 24 – தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்**

தொடர்புபட்ட தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) எல்கேஏஎஸ் 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்**

நியமத்தின் பிரகாரம், நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் உள்ளவாறான நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலைமைகளைக் கருத்திற்கொள்வதன் மூலம் நிதழத்தக்க பொறுப்புக்களிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது இதனுடன் இணங்கியிருக்கவில்லை. மேலும், காணப்படுகின்ற நீதிமன்ற வழக்குகள் தொடர்பாக சட்டத்தரணிகளின் உறுதிப்படுத்தல் கடிதங்களை சமர்ப்பிப்பதற்குத் தவறியிருந்தது.

**(ஈ) எல்கேஏஎஸ் 39 – நிதிக்கருவிகளை இனங்கண்டு அளவிடுதல்**

நியமத்தின் 09 (ii), 46 (அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம், பதவியணியினர் கடன்கள் மீதிகள், மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் நிதிக்கூற்றுக்களில் செயற்திறனான வட்டி முறையின் கீழ் சீராக்குவதன் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. மேலும், கால முதிர்ச்சித் திகதியில் வைத்திருக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் செயற்திறனான வட்டி முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுக் கிரயத்தில் கணிப்பிடுவதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் ''முதிர்ச்சிக்காக உள்ளது'' இன் கீழ் வகைப்படுத்தப்பட்டு இனங்காணப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனி இவற்றுடன் இணங்கியிருக்கவில்லை.

அதேநேரம், நடைமுறைச் சொத்துக்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 910,838,300 தொகையான வைப்புக்கள் நியமத்தின் 9 மற்றும் 45 ஆம் பந்திகளின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு அளவிடப்பட்டிருக்கவில்லை.

**(உ) எல்கேஏஎஸ் 41 – விவசாயம்**

உயிரியல் மாற்றமானது நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் உயிரியல் சொத்துக்களாக இனங்காணப்பட்டு காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 624,198,372 பெறுமதியான உயிரியல் சொத்து கம்பனியால் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உயிரியல் சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது. உயிரியல் சொத்துக்கள் நியமப் பெறுமதியில் கணக்குகளில் கணிப்பிடப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் கரும்பு விவசாயத்தில் ஏற்பட்ட உள்ளபடியான செலவினம் கணக்குகளில் உயிரியல் சொத்துக்களாக கணிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டிருந்தது.

**(ஊ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 07 – நிதிக்கருவிகள் வெளிப்படுத்தல்கள்**

நட்டக்கழிவு ஏற்பாடுகள், ஐயக் கடன்களுக்கான ஒப்பிடுகை தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் சொத்துக்களிலிருந்து நேரடியாக கழிக்கப்பட்டு விவசாயிகளிடமிருந்து பெறவேண்டிய கடன்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(எ) எஸ்எல்எவ்ஆர்எஸ் 08 – செயற்பாட்டுப் பிரிவுகள்**

அறிக்கையிடக்கூடிய பிரிவுகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் நியமத்தின் 22 மற்றும் 28 ஆம் பந்திகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான செவனகல சீனிக் கைத்தொழிலின் சொத்துப் பதிவேட்டில் ரூபா 14,170 எதிர்மறைப் பெறுமதியுடைய சொத்தொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட காணி அபிவிருத்திகளை பெறுமானத்தேய்வு செய்வதில் கம்பனியின் கொள்கையானது வருடாந்தம் இரண்டு சதவீதமாக இருந்த போதிலும் மஹாவெவ செயற்திட்டத்தின் ரூபா 8,384,151 மதிப்புடைய காணி அபிவிருத்திகள் வருடாந்தம் நான்கு சதவீதப்படி பெறுமானத்தேய்விடப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) கம்பனிக்குச் சொந்தமான பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 760,763,929 மீதியானது கொள்வனவுத் திகதியை கருத்திற்கொள்வதற்குப் பதிலாக முழு ஆண்டிற்குமான பெறுமானத்தேய்வுகள் சீரக்கம் செய்யப்பட்டிருந்தன.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் 08 குத்தகை உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய ரூபா 19,038,439 தொகையான கொடுக்கவேண்டிய வட்டிகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், மீளாய்வாண்டிற்கான இலாபம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) இருப்பு உருப்படிகளிற்கான வயதுப் பகுப்பாய்வு வழக்கற்றுப்போன இருப்புக்களிற்கான ஏற்பாடுகளை இனங்காண்பதற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை

அதேநேரம் கம்பனிக்குச் சொந்தமான செவனகல சீனித் தொழிற்சாலையின் ஐந்து இருப்பு உருப்படிகள் ரூபா 36,435,394 எதிர்மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தன.

(ஊ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் விற்பனைக் கிரயம் "பெறுமதி மதிப்பீட்டுச் சீராக்கங்கள்" ஆக ரூபா 1,847,711 ஐ கழித்து ரூபா 4,813,390 ஐ சேர்ப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆகையால், முறையான கிரயக் கணக்கீட்டு நுட்பங்களைப் பின்பற்றாமல் கணிப்பிடப்பட்டிருந்த ரூபா 3,710,632,390 தொகையான பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் மொத்த விற்பனைக் கிரயத்தின் சரியானதன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(எ) முன்னைய முகாமைத்துவத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலையின் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்ட சொத்துக்களிலிருந்து இனங்காணப்பட முடியாதிருந்ததுடன் இந்தச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததனால் அவை நியாயப்பெறுமதியில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீடுகள் 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கிணங்க செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இனங்காணப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான செவனகல சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொறி மற்றும் இயந்திரத்தின் தேறிய மீதி ரூபா 440,242,580 ஆக இருந்த போதிலும் பட்டியலின் பிரகாரம் அது ரூபா 430,194,601 ஆக இருந்தமையால் ரூபா 10,047,979 ஆன வித்தியாசமொன்று காணப்பட்டது.

(ஆ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 442,730 மற்றும் ரூபா 442,924 கிரயமான முறையே களப் பொறி மற்றும் உபகரணம் மற்றும் வாகனங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் காட்டப்பட்ட கிரய மீதிகளிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டன.

(இ) செவனகல மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலைகள் தொடர்பில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக தலைமை அலுவலகத்தால் எடுக்கப்பட்ட மீதிகளுக்கும் செவனகல மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலைகளால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளிற்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. அதற்கிணங்க, பெலவத்தை சீனிக் கைத்தொழிலின் நான்கு கணக்கு மீதிகளில் ரூபா 67,560,469 வேறுபாடும் செவனகல சீனித் தொழிற்சாலையின் ஐந்து கணக்கு மீதிகளில் ரூபா 26,435,833 வேறுபாடும் காணப்பட்டன.

(ஈ) செவனகல மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செவனகல சீனிக் கைத்தொழிலிற்கு செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 1,084,930 வேறுபாடு காணப்பட்ட அதேநேரம் தலைமை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய மீதி விடயத்தில் ரூபா 2,000,390 வேறுபாடு காணப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டவாறு தலைமை அலுவலகத்திலிருந்து பெறவேண்டிய மீதிகளில் ரூபா 45,596,272 வேறுபாடும் காணப்பட்டது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 2.2.4.1 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த 1987 இலிருந்து கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 592,930,256 நீண்டகால நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவாறு 2012 இலிருந்து முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 2,564,708 மீதிகளுடன் சேர்த்து பதவியணியினர் கழகத்திலிருந்து பெறவேண்டியிருந்த பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் 2012 இலிருந்து வியாபாரம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா 1,578,177 நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனிக்குச் சொந்தமான பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவு மீதிகள் 2013/2014 இல் விநியோகஸ்தருக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,348,314 மீதியை உள்ளடக்கியிருந்ததுடன் கம்பனி அந்த மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(இ) வயதுப் பகுப்பாய்வு ஊடாக அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன்களிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செவனகல சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட விவசாயிகளிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 319,114,107 மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 50,225 தொகையான கடன்பட்டோர் கணக்குகளிலுள்ள செலவு மீதி தீர்ப்பனவு செய்யப்படாது பெலவத்தை சீனித் தொழிற்சாலையுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்களிலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் 2013 தொடக்கம் 2015 வரையான ரூபா 26,304,842 ஆன வழிச்சரக்குகளை உள்ளடக்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 வரையிலும் இந்த மீதி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்கத்தால் சுவீகரிப்புச்செய்யப்பட்ட காலத்திற்கு முன்னர் முன்னைய முகாமைத்துவத்தால் விவசாயிகளிற்கு வழங்கப்பட்ட கடன் வசதிகள் பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் கணக்கீடுசெய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது செவனகல சீனித் தொழிற்சாலையால் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்கொடுத்தோருக்குச் செலுத்தவேண்டிய ரூபா 67,403,708 தொகை 2011 இலிருந்து பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் கம்பனி அந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 3,972,068 மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஒரு வருடத்திற்கு மேலாக எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவாக பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 13,658,977 தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மீதான மேலதிகக் கட்டணம் பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகளில் 2011 இலிருந்து உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 56,999 மற்றும் ரூபா 2,225,407 தொகையான முறையே பதவியணியினர் மற்றும் விவசாயிகளிற்குச் செலுத்தவேண்டிய ஊக்குவிப்புக்களும் அந்த மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் லங்கா சதோசவிற்கு செலுத்தவேண்டிய ரூபா 8,086,000 மீதியானது 2013 இலிருந்து இந்த மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 4,074,921 கூட்டுத்தொகையான கோரப்படாத வேதனங்கள் தவறான நடவடிக்கைக்கு வழிவகுக்கும் என்பதால் குறுகிய காலப்பகுதியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் இந்த மீதிகள் ஒரு ஆண்டிற்கு மேலாக கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

(ஊ) செவனகல சீனித் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களில் ஒரு ஆண்டிற்கு மேலாக நானாவித கடன்கொடுத்தோர்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 152,132 மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியானது நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(எ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையுடன் தொடர்புடைய ரூபா 160,442,120 தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மீதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நானாவித கடன்கொடுத்தோர்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஏ) விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட ரூபா 59,822,499 பழைய கடன் மீதியானது செவனகல சீனிக் கைத்தொழிலின் நிதிக்கூற்றுக்களில் நானாவித கடன்கொடுத்தோர்களாக தவறுதலாக காட்டப்பட்டிருந்தது.

**2.2.5 கணக்காய்விற்குச் சான்றின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு கணக்கு விடயங்களிற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயங்கள் | தொகை | சான்று சமர்ப்பிக்கப்படாமை |
|---|---|---|
| | ரூபா | |
| ஹோட்டல் செயற்திட்ட மீதி - பெலவத்தை சீனித் தொழிற்சாலை | 74,821,594 | தொகைகளை சரிபார்ப்பதற்கான ஆதார ஆவணங்கள் |
| அகற்றப்பட்ட களப் பொறி மற்றும் உபகரணம் - பெலவத்தை சீனித் தொழிற்சாலை | 210,000 | |
| நடைமுறை ஆண்டுச் சீராக்கங்கள் | 4,170,957 | |
| வங்கிக்குச் செலுத்த வேண்டிய குத்தகை | 11,812,500 | வங்கி உறுதிப்படுத்தல்கள் |

(ஆ) 2011 இன் 43 ஆம் இலக்க குறைச்செயலாற்றலுடைய தொழில்முயற்சிகள் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்களை புதுப்பித்தல் அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கம்பனிக்கு மாற்றஞ்செய்யப்பட்ட சொத்துக்களின் பட்டியல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 யூன் 02 இன் பிஈடி12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| I. 9.2 (ஈ) பந்தி | ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் என்பன பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட வேண்டிய போதும் கம்பனியின் தலைமை அலுவலகமும் பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளும் இதனுடன் இணங்கியிருக்கவில்லை. |
| II. 5.2.5 ஆம் பந்தி | கம்பனியின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி நாளதுவரையாக்கப்பட்ட பாதீட்டின் பிரதியொன்று வருடம் ஆரம்பித்து 15 நாட்கள் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டிற்கான அத்தகைய பாதிடப்பட்ட மதிப்பீடுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| III. 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனியானது மீளாய்வாண்டிற்கான அதன் நிதிக்கூற்றுக்களை 5 மாதங்களும் 20 நாட்களும் |

| | | |
|---|---|---|
| | | தாமதித்ததன் பின்னர் சமர்ப்பித்திருந்தது. |
| (ஆ) | 2008 யூன் 26 மற்றும் 1999 ஒக்தோபர் 08 இன் முறையே 14/2008 மற்றும் 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் மற்றும் 2015 மே 25 இன் பிஈடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | I. பொருத்தமான பதவிக்கு உரித்துள்ள ரூபா 30,000 மாதாந்த போக்குவரத்துப் படி மற்றும் மாதாந்த எரிபொருள் படி என்பன தனிப்பட்ட பாவனைக்கு அலுவலக வாகனத்தை கொண்டிருப்பதற்கு உரித்துள்ள அலுவலர்களுக்கு செலுத்த முடிந்திருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச்செய்யப்பட்ட 04 அலுவலர்களிற்காக ரூபா 240,000 தொகை மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையிலுள்ள 8 அலுவலர்களிற்காக ரூபா 838,000 தொகை என்பன சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாகவும் அவ்வாறே பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>II. போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளைப் பெறுகின்ற அலுவலர்கள் சாரதியை அல்லது சாரதிக்கான படியை பெறுவதற்கு உரித்தற்றவர்களாகவுள்ள போதிலும் நிரந்தரப் பதவியணியிலுள்ள சாரதியை பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) வேலைக்கமர்த்தியிருந்ததுடன் கம்பனியால் 2015 ஆம் ஆண்டில் ரூபா 488,542 சம்பளம் அந்த சாரதிக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், முகாமைத்துவ மட்ட அலுவலரிற்கு ஒதுக்கப்பட்டிருந்த யாலபோவ வீடமைப்புத் திட்டத்திலுள்ள வதிவிடம் அந்த சாரதிக்கு வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | தேசிய சூழல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செவனகல சீனித் தொழிற்சாலையால் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 இன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகள் 2.14.1 மற்றும் 3.2.1 ஆம் வழிகாட்டிகள் | பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் ரூபா 128,910,000 கிரயத்தில் கிரேன் (Crane) கொள்வனவு செய்வதற்காக அமைச்சுக் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்காததுடன் தேசிய போட்டிக் கேள்விகள் கோரப்படுவதற்குப் பதிலாக சந்தை விலை குறிப்பிடல் முறைமை பின்பற்றப்பட்டிருந்தது. |
| | 3.2.1 ஆம் வழிகாட்டி | செவனகல சீனித் தொழிற்சாலையால் ரூபா 17,400,000 கிரயத்தில் கிரேனை (Crane) கொள்வனவு செய்வதற்காக திணைக்கள கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | 3.4.1 (அ) மற்றும் 7.12.2 (அ) வழிகாட்டிகள் | குறைந்த பெறுமதி மற்றும் அவசரத் தேவைப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது சந்தை விலைக் குறிப்பிடல் முறை பின்பற்றப்பட வேண்டியிருந்த போதும் செவனகல சீனித் தொழிற்சாலையால் ரூபா 11,872,000 மதிப்புடைய |

இரண்டு சாப்ற் மவுண்ட் கியர் பெட்டிகளைக் (Shaft Mount Gear Boxes) கொள்வனவு செய்வதற்கு இந்த முறை பயன்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.7 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செவனகல சீனித் தொழிற்சாலை, கம்பனியின் தலைமை அலுவலகம் மற்றும் பெலவத்தை சீனித் தொழிற்சாலை என்பவற்றின் உயர் முகாமைத்துவ பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் கம்பனியின் பிரதம நிறைவேற்று அலுவலரின் அங்கீகாரத்தை அடிப்படையாகக்கொண்டு முறையே ரூபா 1,920,000, ரூபா 1,560,000 மற்றும் ரூபா 22,537,806 தொகையான பல்வேறு படிகள் பெறப்பட்டிருந்தன.

(ஆ) 2015 ஆகஸ்ட் 24 இல் தீர்மானிக்கப்பட்ட விலைகளை விட குறைவான எதனோல் விற்பனைகள் பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளில் முறையே ரூபா 31,218,000 மற்றும் ரூபா 15,000,000 நட்டம் உள்ளடங்கலாக ரூபா 46,218,000 மொத்த நட்டத்திற்கு காரணமாயிருந்தது. மேலும், எதனோலிற்கான நிர்ணயிக்கப்பட்ட விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் அந்தக் காலப்பகுதியின் போது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் எதனோலை விற்பனை செய்வதற்கு பல விலைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(இ) ரூபா 4,002,360 மற்றும் ரூபா 6,665,725 தொகை முறையே பதுளை மற்றும் கந்தளாய் செயற்திட்டங்களின் செலவினத்தை ஈடுசெய்வதற்காக செலவிடுவதற்கு முறையான அனுமதியில்லாமல் தலைமை அலுவலகத்தால் செவனகல சீனித் தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்டிருந்தது.

(ஈ) 2014 இல் செவனகல சீனித் தொழிற்சாலையிலிருந்து காசை எடுப்பதன் மூலம் தனியார் வங்கியொன்றின் நிலையான வைப்புக் கணக்கில் ரூபா 26,462,500 தொகை வைப்பிலிடப்பட்டிருந்தது. 2016 மார்ச் 13 இல் முதிர்ச்சித் திகதிக்கு முன்னர் பணம் மீளப்பெறப்பட்டிருந்தமையால் ரூபா 870,000 வட்டி நட்டமடைந்திருந்தது.

(உ) செவனகல சீனித் தொழிற்சாலையிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 10,600,000 தொகையான பணத்திலிருந்து ரூபா 10,048,000 கிரயமான வாகனமொன்று பிரதம நிறைவேற்று அலுவலரிற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த பணத்தை மாற்றுவதற்கோ அல்லது வாகனத்தை கொள்வனவு செய்வதற்கோ அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 211,012,935 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 1,052,439,824 வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 841,426,889 ஆன மேலுமொரு வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டு வருமானம் ரூபா 657,667,601 தொகையால் குறைவடைந்தமை மற்றும் விற்பனைக் கிரயம் ரூபா 160,665,253 ஆல் அதிகரித்தமை என்பன நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 கம்பனியின் பெறுமதிச் சேர்க்கை

மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டம் ரூபா 1,067.3 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான கம்பனியின் பங்களிப்பு ரூபா 1,305.6 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய மூன்று ஆண்டுகள் காலப்பகுதியில் நாட்டிற்கான கம்பனியின் பங்களிப்பு பின்வருமாறுள்ளது.

| விபரம் | 2015 | 2014 | 2013 | 2012 (கடந்த 03 மாதங்கள்) |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| ஆண்டிற்கான இலாபம்/ (நட்டம்) | (1,067,300,530) | (150,836,960) | 816,828,301 | (174,323,817) |
| கூட்டு:- பதவியணியினர் வேதனங்கள் | 2,092,819,358 | 1,658,235,775 | 1,540,551,175 | 1,414,038,931 |
| அரசாங்கத்திற்குச் செலுத்திய வரிகள் | (14,860,706) | 60,175,975 | - | - |
| பெறுமானத்தேய்வு | 294,951,968 | 268,727,657 | 199,837,040 | 46,752,626 |
| **பெறுமதிச் சேர்க்கை** | **1,305,610,090** | **1,836,302,447** | **2,557,216,516** | **1,286,467,740** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கம்பனியின் மொத்தப் பதவியணியினர் வேதனங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 434,583,583 ஆல் அதிகரித்திருந்தது.

### 3.3 முக்கியமான கணக்கீட்டு விகிதம்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் முக்கிய சில விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு |
|---|---|---|
| நடைமுறைச் சொத்து விகிதம் | 1:1.8 | 1:2.25 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:1.7 | 1:1.55 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கம்பனியானது 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு நிலையான வைப்புக்களில் முறையே ரூபா 910.84 மில்லியன் மற்றும் ரூபா 1,733.87 மில்லியன் தொகையை முதலிட்டதுடன் கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களில் இந்த முதலீடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இதனால் கம்பனியின் திரவத்தன்மை நிலை திருப்திகரமான மட்டத்திலிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கரும்புகளைப் பிழிவதற்காக அவசரத் தேவைகளாக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 11,872,000 பெறுமதியான இரண்டு சாப்ற் மவுண்டட் கியர் பெட்டிகள் (Shaft Mounted Gear Boxes) 2014 மே 24 இல் பிரதான களஞ்சியங்களிற்காக பெறப்பட்டிருந்தன. எனினும், இவை 2015 திசெம்பரிலேயே கைத்தொழிலில் நிறுவப்பட்டிருந்தன. மேலும், கரும்புகளைப் பிழிதல் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் கரும்புகளைப் பிழிகின்ற மிக முதல் நாளிலேயே இயந்திரம் பழுதடைந்தது.

**(ஆ) கரும்புகளை இறக்குதல் முறைமைகளின் கொள்வனவு**

(i) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் பயன்பாட்டிற்காக ரூபா 128,910,000 கிரயத்தில் கரும்பு அகற்றும் முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது முறையாக நிறுவப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, சீனித் தொழிற்சாலையிலுள்ள பழைய கிரேன் ரூபா 61,333,644 தொகை செலவிடப்பட்டு நிறுவப்பட்டிருந்தது.

(ii) செவனகல சீனித் தொழிற்சாலையால் ரூபா 17,400,000 கிரயத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு கரும்பு இறக்குதல் முறைமைகள் 2015 யூன் 25 அளவில் வேலைசெய்யும் நிலைமையில் இருக்கவில்லை. எவ்வாறாயினும், ரூபா 1,809,600 தொகையான இறுதிக் கொடுப்பனவு கம்பனியால் முறையான நடவடிக்கை எடுக்கப்படாமல் 2015 நவம்பர் 27 இல் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) செவனகல சீனித் தொழிற்சாலையின் கொள்வனவாளர்களுக்கு எதனோலை வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட காற்றை விடுவிக்கும் அலைகளுடனான ஒரு மதுபான ஓட்டமானி (நெப்ரியூன்) 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,951,019 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஓட்டமானி சரியான அளவீட்டுத் தரவை வழங்கவில்லை.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் நூற்றியிருபத்தொரு வாகனங்கள், பொறி மற்றும் உபகரணம் திருத்துவதற்காக அதன் சொந்த விவசாய வேலைத்தளத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வாகனங்களைத் திருத்துவதிலுள்ள காலதாமதம் காரணமாக விளைவற்றிருந்தன. மேலும், கம்பனியால் அவற்றைத் திருத்துவதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 திசெம்பரின் போது திருத்துவதற்காக வழங்கப்பட்ட பதின்மூன்று உழவு இயந்திரங்கள், மூன்று றொபின் பம்பிகள், லொறி மற்றும் கெப் என்பன 2014 இறுதிவரை திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் காணப்பட்டன.

(ஊ) 2014 மே அளவில் ரூபா 27,067,812 இற்கு கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறி நிர்மாணித்தைப் பூர்த்திசெய்வதற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆகஸ்ட் 31 வரையிலும் இது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால், கைத்தொழிலுக்குத் தேவைப்பட்ட சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(எ) 21 விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 15 மதிப்பிடப்பட்ட நட்டங்களுக்கான விலைப்பட்டியல்களை சமர்ப்பிப்பதன் மூலம் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கோரப்பட்டிருக்கவில்லை. மேலும் திருத்தும்

நோக்கத்திற்காக விவசாய வேலைத்தளத்திற்கு அனுப்பப்பட்ட வாகனங்கள் வேலைத்தளத்திலுள்ள தாமதங்களால் திருத்தாமல் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன.

(ஏ) முகாமையாளர்களின் வீடமைப்புத் திட்டத்திலுள்ள 04 வீடுகள் மற்றும் நகர அபிவிருத்திப் பிரிவின் மேற்பார்வையின் கீழுள்ள 131 வீடுகள் திருத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட போதும் திருத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவற்றில் 12 வீடுகள் 10 வருடங்களிற்கு மேலாக திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பெலவத்தை சீனித் தொழிற்சாலை மற்றும் இலங்கை வங்கி பெலவத்தைக் கிளை என்பவற்றிற்கு இணைப்புச்செய்யப்பட்ட 07 அலுவலர்களிடமிருந்து வாடகையை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஒ) பெலவத்தை சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான நூற்றி முப்பத்தியிரண்டு றெயிலர்கள், பவுசர்கள், கிரேன்கள், லோடர்கள், எக்ஸ்கவேட்டர்கள் கம்பனியால் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கரும்பு விவசாயத்திற்காக செவனகல சீனித் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்ட காணி 4,198.41 ஹெக்டெயர்களாகும். எவ்வாறாயினும், அதில் 281.51 ஹெக்டெயர்கள் ஏனைய பயிர்கள் பயிரிடப்பட்டிருந்ததுடன் 27.55 ஹெக்டெயர்கள் அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஔ) 469.87 ஹெக்டெயர்கள் பரப்பளவுடைய காணி 99 வருடங்கள் குத்தகை அடிப்படையில் இலங்கை மகாவலி அதிகாரசபையால் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த போதும் குத்தகை உடன்படிக்கை கம்பனியில் கிடைக்கக்கூடியதாகவிருக்கவில்லை. ஆகையால், அதிகாரமளிக்கப்படாத அத்துமீறல்களுக்கெதிராக கம்பனி சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கமுடியாதிருந்தது.

(க) செவனகல சீனித் தொழிற்சாலையின் ஐம்பத்தேழு விடுதிகள் அதிகாரமளிக்கப்படாத தரப்பினர்களால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 26 இல்லங்கள் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையால் வசிப்பதற்குப் பொருத்தமற்றிருந்தன. இது தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய படிமுறைகளை கருத்தில்கொள்வதன் மூலம் முகாமைத்துவத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) கம்பனியின் பவுசரொன்று விபத்துக் காரணமாக சேதமடைந்திருந்தது. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி பெறப்பட்டிருக்காததால் ரூபா 906,972 சேதத்தை கம்பனி தாங்கிக்கொள்ள வேண்டியிருந்தது.

(கி) ரூபா 2,218,134 தொகை செவனகல சீனிக் கைத்தொழிலால் சம்பளங்களாக 04 சந்தர்ப்பங்களில் ஹிங்குரான சீனிக் கைத்தொழிலுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் ஹிங்குரான சீனிக் கைத்தொழிலின் கணக்குகளில் சம்பளங்களாக ரூபா 1,115,789 தொகை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கீ) 2014 ஆம் ஆண்டில் கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீள ஸ்தாபிப்பதற்காக, ரூபா 7,446,704 தொகை செயற்திட்டமொன்றிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் கரும்பு விவசாயத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 1,331,000 தொகையும் கந்தளாயிலுள்ள புதிய அலுவலகத்திற்கான காணி அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 1,463,153 தொகையும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டம் எவ்வித நலன்களையும் பெற்றுக்கொள்ளாமல் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் கரும்புகள் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) கம்பனி உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை ஸ்தாபித்திருந்த போதும் விசேட கணக்காய்வை மேற்கொள்வதற்கு மூன்று வெளிநபர்களை உள்ளடக்கிய குழுவொன்றிற்காக ரூபா 150,000 தொகையை செலவிட்டிருந்தது.

(கூ) பெலவத்தை சீனித் தொழிற்சாலை வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை திருத்துவதற்கு விவசாய பட்டறைகளை பேணியிருந்த போதும் 11 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் 2014 நவம்பர் தொடக்கம் 2016 மார்ச் வரையான காலப்பகுதியின் போது வெளித்தரப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.

(கெ) பதுளை மாவட்டத்திலுள்ள 9 பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான 791 ஹெக்டெயர்கள் பரப்பளவுடைய காணிகள் கரும்புகள் பயிரிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 6 பிரதேச செயலகங்களிலுள்ள 60.6 ஹெக்டெயர்களில் மாத்திரம் கரும்புகள் பயிரிடப்பட்டிருந்தன. 03 பிரதேச செயலகங்களில் கரும்புப் பயிர்ச்செய்கை தோல்வியடைந்திருந்ததுடன் கரும்புகளை பயிரிட்டதற்கு ஏற்பட்ட காரியங்களை வெளிப்படுத்தாமல் 2015 ஆகஸ்ட் 28 இல் கைவிடப்பட்டிருந்தது. ஆகையால் இதற்காக ஏற்பட்ட கிரயம் பயனற்றதாக இருந்தது.

**4.2 செயற்பாட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) எதனோலிலிருந்தான பங்களிப்பு சீனியை விட அதிகமாகவுள்ளது. எவ்வாறாயினும், 2013, 2014 மற்றும் 2015 இல் பயன்படுத்தப்படாத தொழிற்சாலை இயலளவு முறையே 1 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 45 சதவீதங்களால் அதிகரித்திருந்தன. ஆகையால், கம்பனியின் இலாபத்தன்மை எதனோலின் உற்பத்தி மற்றும் விற்பனையின் வீழ்ச்சி காரணமாக குறைவடைந்திருந்தது.

(ஆ) வீஏரீ (VAT) 2 கொள்கலனில் களஞ்சியப்படுத்தப்பட்ட பாவனைக்குகந்த எதனோலிற்கு 35,000 லீற்றர்கள் பாவனைக்குகந்ததல்லாத எதனோலைக் கலப்பதன் மூலம் பெலவத்தை சீனித் தொழிற்சாலைக்கு ரூபா 18,185,400 நட்டமொன்று ஏற்பட்டிருந்தமையால் 60,618 லீற்றர்கள் எதனோல் பாவனைக்குகந்ததல்லாததாக பெறப்பட்டிருந்தது. இது 2015 ஆகஸ்ட் 28 இல் உள்ளவாறு 60,731 லீற்றர்களாக இருந்ததுடன் 2015 ஒக்தோபர் 22 இல் உள்ளவாறு 113 லீற்றர்கள் பற்றாக்குறையினை விளைவித்து 60,618 லீற்றர்களாக குறைவடைந்திருந்தது.

(இ) தொழிற்சாலையிலிருந்து வடிசாராயத் தெழிற்சாலைக்கான விடுவிக்கப்பட்ட வெல்லப்பாகிற்கும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் வடிசாராயத் தொழிற்சாலையால் பெறப்பட்ட வெல்லப்பாகிற்கும் இடையே வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. ஆகையால், 751 மெற்றிக்தொன் வெல்லப்பாகு தொடர்பில் 2015 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 22,999,375 தொகை நட்டமடைந்திருந்தது.

(ஈ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் நாளாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட வீஏரீ (VAT) கொள்கலன்களில் களஞ்சியப்படுத்துவதற்கு எதனோலை அனுப்பும் நேரத்தில் அதனை அளவிடுவதற்கு நியம முறைமையொன்றை பயன்படுத்துவதற்கு கம்பனி நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(உ) பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் சீனிப் படிமம் அல்லது ஏனைய காரணங்களால் பயன்படுத்தமுடியாத சீனி மீள்செய்முறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீள்செய்முறைக்கு உள்ளீடு செய்த தொகையை ஆவணப்படுத்துவதற்கு சரியான முறைமை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) எதனோல் உற்பத்தியின் 143,892 லீற்றர்கள் கொள்ளளவுடனான செவனகல சீனித் தொழிற்சாலையில் வீஏரீ 3 கொள்கலன் பலவீனமான எதனோலின் 35,642 லீற்றர்களை களஞ்சியப்படுத்தியமையால் விளைவற்றிருந்தது.

(ii) பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் இறுதி இருப்புக்களின் பௌதீக மெய்மையாய்வில் எதனோலின் 5,715.28 லீற்றர்கள் மிகை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. நிலைமை, உள்ளபடியான அளவு, அந்த நேரத்திலுள்ள பற்றாக்குறை, நியம விலகல் போன்றன எதனோல் இருப்புக்கள் தொடர்பில் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால் முன்வைக்கப்பட்ட முறைமைகளும் கட்டுப்பாடுகளும் கணக்காய்வில் திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஊ) தொழிற்சாலையிலுள்ள விற்பனைகள், சந்தைப்படுத்தல், நிர்வாகம் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றை வழிப்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள், கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் உள்ளடங்கலான கையேடுகள் கம்பனியில் கிடைக்க்ககூடியதாக இருக்கவில்லை.

(எ) பழுதடைந்த 30 வருடங்கள் பழமையான பொறி மற்றும் உபகரணங்களை மீளமைக்கவோ அல்லது திருத்துவதற்கோ முகாமைத்துவம் நடவடிக்கைகள் எடுத்திருக்காததுடன் 2014 உடன் ஒப்பிடும் போது 2015 இல் இயந்திரங்களினை நிறுவுவதன் காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டிருந்த மணித்தியாலங்கள் அதிகரித்திருந்ததுடன் மொத்த தொழிற்சாலை மணித்தியாலங்களில் இது 12 சதவீதமாகும்.

(ஏ) அலகு உற்பத்திக் கிரயத்தை கணிப்பிடுவதற்கு பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் முறையான கிரய கணக்கீட்டு முறைமை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட பெலவத்தை சீனித் தொழிற்சாலையின் 6 ஊழியர்களிற்கு முகாமைத்துவக் கட்டணமாக ரூபா 1,600,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் 2015 ஆம் ஆண்டில் அதே ஊழியர்களிற்கு செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 2,131,227 ஆக இருந்தது.

(ஆ) பெலவத்தை மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலைகளால் உற்பத்தி செய்யப்பட்ட எதனோலின் ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய விற்பனை விலை முறையே ரூபா 290 மற்றும் ரூபா 350 ஆக விலைக் குழு தீர்மானித்திருந்தது. கம்பனி அதன் எதனோலை ஆகக் குறைந்த விலையை விட குறைவாக அல்லது குறைந்த விலைகளில் விற்பனை செய்திருந்தது. ஆகையால் எதனோலின் விற்பனை வருமானம் 2014 உடன் ஒப்பிடுகையில் 2015 இல் ரூபா 760,169,391 ஆல் அல்லது 32 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

மேலும், எதனோலின் 90 சதவீதம் லீற்றரொன்று ரூபா 290 ஆக ஆகக்குறைந்த விற்பனை விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனியின் விற்பனைக் கொள்கை பெருமளவு மதுபான உற்பத்தியாளாகளிற்கு உயர் நலன்களை வழங்குகின்றதுடன் அதன் மூலம் கம்பனிக்கு பாரியளவு நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பெலவத்தை மற்றும் செவனகல என்பன கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கந்தளாய் மற்றும் ஹிங்குரா சீனித் தொழிற்சாலைகள் கம்பனிக்கு வழங்கப்படாதிருந்ததால் அவை விளைவற்றிருந்தன.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) ரூபா 1,371,265 வருடாந்தக் கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கணக்குகள் தயாரிப்பதற்காக பெலவத்தை சீனித் தொழிற்சாலையால் கணக்கீட்டுப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த மென்பொருளிலுள்ள அனேகமான கூறுகள் கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 576,782,652 வங்கிமேலதிகப்பற்றிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 60,590,053 வட்டி செலுத்தப்பட்டிருந்தது.

(இ) கம்பனியின் குறிக்கோள்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்காத பதுளை மாவட்டத்திலுள்ள அலுவலர்களுக்கிடையே அரசாங்க பெருந்தோட்ட அமைச்சினால் உறுதிகளை பகிர்ந்தளிப்பதற்கான அனுசரணைகளாக ரூபா 1,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது சிறியளவிலான கரும்பு விவசாயிகள் சீனி உற்பத்திச் செயற்திட்டம் - பதுளை இற்காக ரூபா 6,628,619 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய செலவினங்களின் சரியான தன்மை தொடர்பில் உரிய அலுவலரினால் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 782,843 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதி அரசியல்வாதியின் விபரங்கள் இதில் அச்சிடப்பட்டிருந்தமையால் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

(உ) கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் ஒப்பந்த அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பின்னர் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலரொருவர் பதுளை மாவட்டத்தில் கரும்பு விவசாயத்தினை அபிவிருத்தி செய்து விநியோகிப்பதற்கான இணைப்பு அலுவலராகவும் அதேநேரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவருக்கு மாதமொன்றிற்கு ரூபா 100,000 தொகைப்படி 2014 இல் 11 மாதங்களிற்காக ரூபா 1,100,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தலைமை அலுவலகத்தின் உள்ளபடியான பதவியணியினர் 17 ஆனதுடன் பெலவத்தை சீனிக் கைத்தொழிலின் 8 ஊழியர்கள் இந்தப் பதவியணியினரில் உள்ளடங்கியிருந்தனர். தலைமை அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், முகாமைத்துவ மட்ட அலுவலர்கள் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் இந்த நியமனங்கள் வருடாந்தம் புதுப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) செவனகல சீனித் தொழிற்சாலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும், முன்னைய அலுவலர்களின் தனிநபர்க் கோவைகள் தொழிற்சாலையில் காணப்பட்டிருக்கவில்லை.

(இ) பெலவத்தை சீனித் தொழிற்சாலைக்கான ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியணியினர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கிரய மற்றும் நிதிக் கணக்கீடு | சரியான கிரய மற்றும் நிதிக் கணக்கீட்டு முறைமை இல்லாமை |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடுகள் | வழக்கிழந்த இருப்புக்களை இனங்காண்பதன் மூலம் ஏற்பாடுகள் அல்லது பதிவளிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் வயதுப் பகுப்பாய்வு ஊடாக அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன்களிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அட்டுறு செலவினங்கள் | நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை காணப்படவில்லை. |
| (ஊ) | கொள்வனவுகள் | கொள்வனவு வழிகாட்டல்களிலுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |